# ஒன்றாக வளர்வது மிகவும் சிறந்தது

## 4.5 நாம் எப்போதும் தேவனைச் சார்ந்திருக்கிறோம்




**வேத வசனம்:** **உன் சுயபுத்தியின்மேல் சாயாமல், உன் முழு இருதயத்தோடும் கர்த்தரில் நம்பிக்கையாயிருந்து.**
*நீதிமொழிகள் 3:5*

**அறிக்கை:** **நாம் செய்கிற எல்லா காரியத்திலும் நாம் எடுக்கிற எல்லா முடிவிலும் நம்மில் கிரியைச் செய்கிற தேவனையே சார்ந்து இருப்போம்**



**சத்தியம்:** தம்மை விசுவாசிக்கிறவர்களிடத்திலும் தம்முடைய சித்தத்தை நிறைவேற்ற வாஞ்சையாயிருக்கிறவர்களிடத்திலும் தேவன் கிரியை செய்கிறார். எனவே நாம் தேவனிடத்தில் விசுவாசமாயிருந்து அவருடைய சித்தத்தைச் சார்ந்திருக்கக்கடவோம்.

## வேதப் பகுதி: யோவான் 18:1-11

### பாடம்

**1. நாம் பலவிதமான உபத்திரவங்களைச் சந்திக்க வேண்டும்:** கர்த்தராகிய இயேசு கிறிஸ்து சரீரத்தில் வாழ்ந்தபோது இஸ்ரவேல் என்ற பரிசுத்த பூமியில் வாழ்ந்தார். அவர் காட்டிக்கொடுக்கப்பட்ட நாள் இரவு சீஷர்கள் கெத்செமனேயில் இருந்தார்கள். பட்டயத்துடன் ஒரு கூட்டம் வந்து அவரைக் கைது செய்து அழைத்துச் சென்றது. பேதுரு கோபத்தினாலும் மிகுந்த பதட்டத்தினாலும் தன் பட்டயத்தை எடுத்து அங்கிருந்த ஒருவனுடைய காதை வெட்டினார். இயேசுவோ பேதுருவைக் கடிந்து கொண்டார். அவர் அந்த மனிதனைத் தொட்டுக் குணமாக்கினார். கர்த்தருடைய சீடர்கள் மிகுந்த இக்கட்டையும் பிரச்சனையையும் எதிர்கொண்டார்கள். நீங்களும் நானும் கட்டாயம் பிரச்சனைகளையும் சவால்களையும் எதிர்கொள்ள வேண்டும். (லூக்கா 22:50-51, யோவான் 18:1-11)

**2. நாம் அநேக தீர்மானங்களை எடுக்க வேண்டும்:** பிரச்சனைகளையும் சவால்களையும் தாண்டி மனிதர் அவ்வப்போது தீர்மானங்கள் எடுக்கவும் தேர்வுகள் செய்யவும் வேண்டும். நல்ல தெரிந்தெடுப்புகள் நன்மையிலும் தவறான தெரிந்தெடுப்புகள் தீமையிலும் இழப்புகளிலும் கூட முடியும். உதாரணத்திற்கு வீட்டுப்பாடத்தை முடிப்பதற்கும் வலைதளத்தில் வேலை செய்வதற்கும் இடையில் எதைத் தேர்வு செய்வது என்ற குழப்பம் வரும். அதிக முக்கியம் இல்லாத செயலைத் தேர்வு செய்தால் வெற்றி வருமா? தோல்வி வருமா? (நீதி. 14:12)

**3 உங்கள் சுயபுத்தியின் மேல் சாயாதிருங்கள்:** தேவன் சொல்லுகிறார்: "பூமியைப்பார்க்கிலும் வானங்கள் எப்படி உயர்ந்திருக்கிறதோ, அப்படியே உங்கள் வழிகளைப்பார்க்கிலும் என் வழிகளும், உங்கள் நினைவுகளைப் பார்க்கிலும் என் நினைவுகளும் உயர்ந்திருக்கிறது". நம்மை நாமே சார்ந்திருப்பது சிறந்தது என்று உலகம் கற்பிக்கிறது. ஆனால் கர்த்தரோ நாம் அவரைச் சார்ந்திருந்து அவருடைய ஞானத்தையே கற்றுக்கொள்ள வேண்டும் என்று சொல்லுகிறார். பேதுரு கெத்செமனேத் தோட்டத்தில் தன்னுடைய புரிதலையே சார்ந்திருந்ததால் வேறொருவனுடைய காதை வெட்டும்படி நேர்ந்தது. (நீதி. 3:5., ஏசாயா 55:9)

**4. தேவன் நம்மை வழிநடத்தி நமக்கு உதவி செய்கிறார்:** தேவனே நம்முடைய அன்பான கர்த்தர். அவர் நம்மை நடத்தவும் நமக்கு உதவிசெய்யவும் விரும்புகிறார். அவர் வலியையும் வேதனைகளையும் அனுபவித்ததால் நம் வலிகளையும் புரிந்துகொள்ளுகிறார். தேவன் சொல்லுகிறார், "பூமியைப்பார்க்கிலும் வானங்கள் எப்படி உயர்ந்திருக்கிறதோ, அப்படியே உங்கள் வழிகளைப்பார்க்கிலும் என் வழிகளும், உங்கள் நினைவுகளைப் பார்க்கிலும் என் நினைவுகளும் உயர்ந்திருக்கிறது". தேவன் தம்மையே நம்புகிற அனைவருக்கும் ஞானத்தின் ஆவியையும் புரிந்துகொள்ளுதலையும் தருகிறார். அவைகளால் நாம் சரியான தீர்மானங்களைச் செய்து வாழ்வில் வெற்றிகளை அனுபவிக்க முடியும். (ஏசாயா 55:9, 11:2)

**5. தேவன் நம்மில் அதிகாரமுள்ளவராகவும் கிரியைச் செய்கிறவராகவும் இருக்கிறார்:** நம்முடைய தேவனாகிய கர்த்தர் அனைத்தையும் நடத்தி வருகிறவர். உதாரணத்திற்கு, இயேசுவின் பிறப்பு உலகில் உள்ள அனைத்து நாள்காட்டிகளையும் தீர்மானிக்கிறது. அதற்கும் மேலாக தேவன் தாம் துவங்கிய அனைத்து நல்ல செயல்களையும் முடிக்கிறார். நம்முடைய வாழ்வில் அவர் துவங்கிய நல்ல செயல்கள் அனைத்தையும் நாம் அவரை நம்பும்போது அவற்றை முடித்தும் வைக்கிறார். (பிலிப்பியர் 1:6, 2:13)

**முடிவுரை:** நம்முடைய பாடுகளையும் துன்பங்களையும் நாம் எதிர்கொண்டு வெற்றிபெறத் தேவையான ஞானத்தை நாம் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பது தேவனுடைய சித்தம். நாம் ஜெபித்து தேவனையே எப்போதும் சார்ந்திருப்போம்.

**ஜெபம் / அழைப்பு:** இன்றைய சத்தியம் நமது இருதயங்களில் எழுதப்படும்படி இயேசுவின் நாமத்தினால் ஜெபியுங்கள்.